23.07.2019 <u>O.S.58 /2016</u>

வா.சா.1 கலா

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டார்.)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

என் கணவருக்கு சொந்த ஊர் எருமலைநாயக்கன்பட்டி என்றால் சரிதான். எனக்கு 1987ல் திருமணம் முடிந்ததிலிருந்து என் கணவர் ஜவுளி வியாபாரம் செய்து வந்தார் என்றும், கர்நாடகாவில் என் கணவருடன் 1997ம் வருடம் வரை இருந்தேன் என்றால் சரிதான். என் கணவருக்கு தொழில் நஷ்டம் ஏற்பட்டதால் என் தகப்பனாரிடம் முறையிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் என்னையும், என் கணவரையும் தேனிக்கு கூட்டி வந்து சுப்பன் தெருவில் ஒரு வாடகை வீட்டில் குடி வைத்தாரா என்றால் இல்லை. என்னுடைய நலன் கருதி தேனி சுப்பன் தெருவில் மகாலட்சுமி ஏஜென்ஸிஸ் என்ற நிறுவனத்தை என் தகப்பனார் ஆரம்பித்தார் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் தான் 1998ம் வருடத்தில் ஆரம்பித்தார். மகாலட்சுமி ஏஜென்ஸிஸ் என்பது ஒரு கூட்டாண்மை நிறுவனம் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் என் கணவர் நான், என் நாத்தனார் மகன், என் அம்மா ஆகியோர்கள் பங்குதாரர்களாக இருந்தார்கள். அந்த நிறுவனம் இன்று வரை நடைமுறையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். தற்போது அந்த நிறுவனம் என் கணவர் மற்றும் என் பெயரிலும் இருக்கிறது. இந்த நிறுவனத்தின் வரவு செலவுகள் வருடா வருடம் தணிக்கைக்கு அனுப்புவதுண்டு. எங்களுக்கு ஆடிட்டர் யார் என்று ஞாபகமில்லை. என் அம்மாவையயம், நாத்தனாருடைய மகனையும் அந்த நிறுவனத்திலிருந்து எந்த காரணத்திற்காக நீக்கினேன் என்றால் அவர்களை நாங்களை வேண்டாம் என்று சொல்லிவிட்டோம். என் நிறுவனத்திலிருந்து என் தாயார் பாகத்திற்கு நாங்கள் ஏதாவது பணம் கொடுத்தற்கான ஆதாரம் எதுவும் இருக்கிறதா என்றால் ஆதாரம் இப்போது இல்லை. 2009லிலேயே பணம் கொடுத்து முடித்துவிட்டேன். நான் என் தாயாருக்கு எந்தவிதமான பணமும் கொடுக்கவில்லை என்றும், இந்த

வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் காலமான பிறகு இந்த நிறுவனத்திலிருந்து பணம் கொடுக்கவேண்டும் என்று என் தம்பி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து போலிசார் விசாரித்தார்களாஎன்றால் என் தம்பியும், அவரின் மனைவியும் சேர்ந்து தான் புகார் கொடுத்து போலிசார் விசாரித்தார்கள். விசாரணையிலேயே இந்த நிறுவனம் எங்களுடைய வறுமையின் காரணத்திற்காகவும், எங்களின் நலன் கருதி என் தகப்பனார் எங்கள் பெயரில் ஆரம்பித்தார் என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்திலேயே இரு தரப்பிலும் பேசி என் தம்பிக்கு ரூபாய்.21,00,000/- கொடுப்பதாக நாங்கள் ஒப்புக்கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. மகாலட்சுமி நிறுவனத்தில் என் தம்பியை உள்ளே அனுமதிக்காததால் தான் என் தம்பி தற்கொலை செய்துகொண்டார் என்று சொன்னால் சரியல்ல. 1997ல் என் பெயரில் சொத்து எதுவும் இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்து கூட என் தகப்பனார்தன் பணத்தை வைத்து தான் என் பெயருக்கு வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கர்நாடாகாவில் சம்பாதித்த பணத்தை கொண்டு வாங்கிய சொத்தாகும். கர்நாடாகாவில் எவ்வளவு சம்பாதித்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. என்அப்பா மீது எனக்குதனிப்பட்ட விரேதம்இல்லை. என் அப்பாஆசிரியர் வேலை செய்து ஒய்வு பெற்றுவிட்டார். என் அப்பா எப்போதும் நல்ல காரியம் தான் செய்வார். என் தாயாருக்கு வயது 80 ஆகிறது. 2ம் பிரதிவாதி சரோஜா பாண்டிச்சேரியில் நிரந்தரமாக குடியிருக்கிறார். அங்கு அவருக்கு சொந்த வீடு இருக்கிறது. 3ம் பிரதிவாதி லதா சென்னையில் வசதியாக இருக்கிறார் என்றால் சரிதான். என் கணவர் கர்நாடாகாவில் இருந்து வந்தபின்பு என் தகப்பனாரும், கணவரும் பூதிப்புரம்ரோட்டில் சில இடங்களை வாங்கி ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அந்த ரியல் எஸ்டேட் தொழிலில் என் கணவர் அதிகமாக பணத்தை என் தகப்பனாரிடம் வாங்கி மோசடி செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 4வது இலக்கச்சொத்து முழுவதுமே என் தகப்பனாருடைய பணத்தை கொண்டு தான் வாங்கியது என்றால் சரியல்ல.

4வது இலக்கச்சொத்து என் தகப்பனாருக்கு கிடைத்த பாகத்தில் எனக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதுஅல்ல என்றுசொன்னால் சரியல்ல. அந்த சொத்து என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தை விற்று வாங்கப்பட்டது. தேனியில் பெரியகுளம் ரோட்டில் இருந்த கடையை 1991ல்விற்று அந்த சொத்து வாங்கப்பட்டது. 4வது இலக்கச்சொத்து 1992ல் வாங்கப்பட்டது. மேற்கண்ட விபரத்தை நான் தாக்கல் செய்துள்ள பிராதிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 5வது இலக்கச்சொத்தின் சர்வே எண்.1434/2ல் கண்ட 1716 சதுரடி உள்ள இடம் 28.10.2004ம் தேதி என் தகப்பனாருக்கு இந்த இடத்தை ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிகொடுத்திருந்தேன் என்றால் சரிதான். 5வது இலக்கச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 46 செண்ட். அதனுடைய தற்போதைய மதிப்பு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. என் தகப்பனாருக்கு நான் கொடுத்த இடத்தில் என் தகப்பனார் உயிருடன் இருக்கும் போதே வீடு கட்டியிருந்தார் என்று சொன்னால் சரிதான். அந்த வீட்டிற்கு வீட்டுவரி என் தகப்பனார் பெயரில் ஏற்பட்டிருந்தது எனக்கு தெரியும். என் தகப்பனார் காலத்திற்கு பின்னால் அந்த வீட்டிற்கு என் தம்பி ராம்நிவாஸ் பெயரில் வரி விதிப்பு செய்யப்பட்டது என்றால்சரிதான். என் தம்பி ராம்நிவாஸ் சட்டப்படியான வாரிசுகள் என் தாயார் மீனாம்மாளும், 4 மற்றும் 5 பிரதிவாதிகளும் என்றால் சரிதான். என் தகப்பனார் இருக்கும்போது நான் 4வது இலக்கச்சொத்தைப்பொறுத்து பாகம் பிரித்து கொடுங்கள் என்று என் தகப்பனாரிடம் கேட்டேனா என்றால் 2010-2011ம் ஆண்டில் கேட்டேன். நான் என் தகப்பனாருக்கு 4வது இலக்கச் சொத்தைப் பொறுத்து ஏதாவது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பியிருந்தேன். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்வரை 4வது இலக்கச் சொத்தைப் பொறுத்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால்சரியல்ல. 4வது இலக்கச் சொத்திற்கு முன்பாக வடக்கில் 10 அடி அகலமுள்ள கிழமேல் பாதை உள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் உயிருடன் இருக்கும்வரை என்

தம்பிக்கும், 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கும் பாதையை பொறுத்து எந்தவித தொந்தரவும் கொடுக்காமல், என் தகப்பனார் இறந்த பின்பு நானும், என் கணவரும் தொந்தரவு கொடுத்தோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த இடத்திற்கு கிழக்கு பக்கம் தான் பாதை உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 5வது இலக்கச்சொத்தில் வடக்கு மாலாக 10 அடி அகலமுள்ள பாதை காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவர் வீட்டிலிருந்து கிழக்கு பக்கமாக அந்த பாதை இருக்கிறது. என்தம்பி ராம்நிவாஸ் 2014ல் காலமாகிவீட்டார். என் தம்பி இருக்கும்போதே பாதையை பொறுத்து நாங்கள் இடைஞ்சல் செய்தததால் தேனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒஎஸ் எண்.164/14 என்ற வழக்கு நிலுவையில் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் 4ம் பிரதிவாதிக்கு வீட்டை தானமாக எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என் அப்பாவின் மீதுள்ள பாசத்தாலும், அன்பினாலும் 4வது இலக்கச்சொத்தை தானமாக எழுதிக்கொடுத்தேன் என்றால் என் அப்பா பணம் கொடுத்தார். நான் 4வது இலக்கச்சொத்தை என் அப்பாவிற்கு தானமாக கொடுத்துவிட்டு அந்த சொத்தில் நானோ, மற்ற பெண் பிள்ளைகளோ பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. பூர்வீக சொத்தான போடேந்திரபுரத்தில் இருந்த வயலை விற்று தான் எனக்கு பணம் கொடுத்தார். நான் மகாலட்சுமி நிறுவனத்தில் என் தகப்பனாருடைய பாகத்தை கொடுக்காததாலும், என் தம்பி பெயரில் வேறு எந்தசொத்தும் இல்லாததால், நல்ல எண்ணத்தின் அடிப்படையில் அவருடைய வாரிசுக்கு சொத்து எழுதிவைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 10.10.2012ம் தேதி 5ம் பிரதிவாதியாகிய மைனர் பெயரில் 1வது இலக்கச்சொத்தையும், 2வது இலக்கச்சொத்தையும், 3வது இலக்கச் சொத்தையும், உயில் சாசனம் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றும் அது சட்டப்படியானது என்றும் சொன்னால் சரியல்ல. பூர்வீக சொத்தில் தான் வாங்கியது. என் தம்பி இறந்த பின்பு என் தாயாரும் 4, 5 பிரதிவாதிகள் அந்த வீட்டில் இல்லை என்றும், அவர்கள் வேறு வீட்டிற்கு சென்றுவிட்டார்கள் என்றும் சொன்னால் சரிதான். நானும், என் கணவரும் அவர்களுக்கு

இடைஞ்சல் செய்ததால் அவர்கள் வேறு வீட்டிற்கு சென்றுவிட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த பாதையை பொறுத்து 4ம் பிரதிவாதியின்மீதும், அவர்கள் என் மீதும் பழனிசெட்டிபட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்குகள்நிலுவையில் உள்ளன என்று சொன்னால் சரிதான். 6வது இலக்கச்சொத்தில் அவர்கள் வாடகை வாங்கி குடும்பத்தை நடத்தலாம் என்று எண்ணியிருந்ததில் அந்த அலுவலகத்தை நடத்தவிடாமல் நாங்கள் தொந்தரவு செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. என் தம்பிக்கு நான் எழுதிககொடுத்த கிரைய ஒப்பந்தத்தை பொறுத்து தேனி மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் ஒஎஸ் எண்100/2018 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நானும், என் சகோதரிகளும் வசதி வாய்ப்புடன் இருக்கிறோம் என்றும், 4ம் பிரதிவாதி இளம்விதவையாக இருப்பதாலும், 5ம் பிரதிவாதி மைனராக இருப்பதாலும், நல்ல காரியத்திற்காக என் தகப்பனார் சில சொத்துக்களை 5ம்பிரதிவாதியின் பெயரில் எழுதி வைத்தார் என்று சொன்னால்சரியல்ல. மேலும், என் அப்பாவிற்கும்,அவரது சகோதரக்குள்ளேயும் ஏற்கனவே பாகம் ஏற்பட்டுவிட்டதால் என் தகப்பனாருக்கு கிடைத்த சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களில் பாகம் கேட்க எனக்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நானும், மற்ற பிரதிவாதிகளும் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் காலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் 5ம் பிரதிவாதியின் பெயரில் எழுதி வைத்து தஸ்தாவேஜுக்கள்அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சிறிது நாட்கள் கழித்து எனக்கு தெரியும். சுமார் 1 வருடம் கழித்து தான் எனக்கு தெரியும். என் மீது 4ம் பிரதிவாதி பாதை சம்பந்தமாக வழக்கு போட்டதால் நான் என் அம்மா வயதானவர் என்று தெரிந்திருந்தும், 4ம்பிரதிவாதி இளம் விதவை என்று தெரிந்திருந்தும், என் கணவரின் தூண்டுதலின்பேரில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. இந்த வழக்கிற்கு நான் சொல்லியிருக்கும் வழக்குமூலம் சரியல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 2016ம் வருடத்தில் நகல் எடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

**(ஒம்) S.சீனிவாசன். B.Sc.,M.L.,**
**கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி**